# தமிழி

**தமிழ்ப் பல்கலைக்கழகம்,**
**தஞ்சாவூர்.**
**செய்திமலர் - ஆண்டுச் சிறப்புமலர்**
**அக்டோபர் 2018 - செப்டம்பர் 2019**

பதிப்பாசிரியர்
பேராசிரியர் கோ.பாலசுப்ரமணியன்
துணைவேந்தர்

பொறுப்பாசிரியர்கள்
முனைவர் தெ.வெற்றிச்செல்வன்
உதவிப் பேராசிரியர்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை

முனைவர் மா.அறிவானந்தன்
உதவிப் பேராசிரியர்
சமூக அறிவியல் துறை

ஒளிப்படங்கள்
கேள்வி - காட்சி மையம்

தரவாக்கம்
மக்கள் தொடர்புப் பிரிவு

மலரழகு
மு.திருநாவுக்கரசு

வெளியீடு
பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மின்னஞ்சல்
thamizhitu@gmail.com
இணையதளம்
www.tamiluniversity.ac.in


## துணைவேந்தர் குறிப்பு

தமிழில் செய்தி இதழ்கள் ஐரோப்பியரின் புத்தெழுச்சி காலம் தொட்டு அறிமுகமாகி வளர்ந்து வந்துள்ளன. அவற்றின் முக்கியத்துவம் மிகுதியாகவே உணரப்பட்டுள்ளது. திருநெல்வேலிப் பகுதியில் 'காலரா' எனும் பெருநோய் பரவிய போது, அருட்பணியாளர் ரேனியஸ் முதன் முதலில் சிறு இதழ் வெளியிட்டு, இப்படியான காலங்களில் மக்கள் எப்படித் தங்களைத் தற்காத்துத் தூய்மையாக இருந்து, நல்வாழ்வு வாழவேண்டும் என்கிற, விழிப்புணர்வுப் பரப்புரையைத் தொடங்கி வைத்த வரலாற்றை, ஆய்வறிஞர் தொ.பரமசிவன் 'மறைத்தமிழ்' ஆவணப்படத்தில் பேசுகிறார். இன்று, பல நிறுவனங்களும், ஆர்வலர்களும் தத்தம் செயல்பாடுகளைப் பரவலாக அறிவிக்க, செய்திமலர்கள் வெளியிடுவதைக் காணமுடிகிறது.

நமது தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்திமலர் புத்துயிர்ப்போடு 'தமிழி' எனும் அடையாளப் பெயருடன், பல்கலைக்கழக ஆராய்ச்சிச் செயன்மையை, உலகுக்கு உரக்க அறிவிக்க, இந்தச் சிறப்புமலர் தொடங்கி, இனி 'தமிழி', இனிதே காலாண்டு இதழாக வலம் வரும். 'தமிழி' என்பது, தொன்மையான கல்வெட்டுகளில் காணப்படும் கல்லெழுத்து. சிலர் 'தமிழ் பிராமி' என்றும் குறிப்பர். 'தமிழ் பிராமி' என்பதற்கு, நிகரான நல்ல தமிழ்ச்சொல் 'தமிழி' என்பதை நாமறிவோம்.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறையும், இன்ன பிற நிதிநல்கை நிறுவனங்களும் பங்களித்திருக்கும் ஆய்வுத் திட்டங்கள், பயிலரங்குகள், கருத்தரங்குகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சிறப்பு நிகழ்வுகள் இவற்றைத் தொகுத்துப் பார்க்கையில், தமிழி எனும் கண்ணாடியில், தமிழ்ப் பல்கலைக்கழகம் மிளிர்கிறது. இனி வரும் காலங்களில், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தமிழி விரிவான செய்திகளுடன் உங்கள் கைகளில் தவழும்.

வாழ்க செந்தமிழ். வளர்க தமிழ்ப் பல்கலைக்கழகம்.



தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கான நியமன ஆணையை,
தமிழக மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து பெற்றபோது....



மாண்பமை துணைவேந்தர் பொறுப்பேற்றல் (04. 10. 2018)



தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவியேற்றதும்,
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றபோது....



17-10-2018

தமிழ்ப்பல்கலைக்கழக இணைவேந்தர், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் க.பாண்டியராஜன் அவர்கள், சுவடி மையத்தைப் பார்வையிட்டபோது...







## சாகித்திய அகாதெமி தேசிய புத்தக வாரவிழா - புத்தகக் கண்காட்சி

சாகித்திய அகாதெமி சார்பாகத் தேசிய புத்தக வாரவிழா, புத்தகக் கண்காட்சி, இலக்கிய நிகழ்சிகள் 14.09.2018 அன்று நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் தொடக்கவுரை ஆற்றிய துணைவேந்தர், குறிப்பிட்டதாவது:

சாகித்திய அகாதெமி என்ற நிறுவனம், ஒரு வருடத்திற்குச் சுமார் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களை 24 மொழிகளில் வெளியிட்டு, இந்தியாவின் பண்பாட்டு ஒற்றுமைக்கும், தேசிய ஒற்றுமைக்கும் மிகப்பெரிய பங்காற்றி வருகிறது. மொழிபெயர்ப்புகள் மூலமாக, நாம் நமது சகோதரர்களைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது. ஆனால் இன்று வாசிப்பு என்பது முகநூல், புலனம் (வாட்ஸ்அப்) என்று சுருங்கிப் போய் விட்ட நிலையில், சாகித்திய அகாதெமி போன்ற நிறுவனங்கள் மக்களிடம் வாசிப்புத் தன்மையை முன்னிலைப்படுத்துகின்றன.

சாகித்திய அகாதெமி வெளியிடும் பல மொழிகளிலுள்ள ஆளுமை நூல்களைப் படிப்பதன் மூலம், வாழ்க்கையில் ஒரு உந்துதல் கிடைக்கும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தற்போது, மொழி பெயர்ப்புத்துறை, இந்திய மொழிகள் பள்ளி இவ்விரு துறைகளும் ஒப்பீட்டு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும், மலையாளம், கன்னடம், தெலுங்கு, சமஸ்கிருதம் என்ற நான்கு துறைகளை உருவாக்க, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேறு மொழிகளிலுள்ள இலக்கியங்களைத் தேடிச்சென்று படித்து, அவர்களுடைய வாழ்க்கை முறை, பண்பாடு, கலைகள் போன்றவற்றைத் தெரிந்து கொள்வதன் மூலமாக, நமது மனது விரிவடைகிறது என்றார், துணைவேந்தர். இந்நிகழ்வில் சாகித்திய அகாதெமி பொறுப்பு அலுவலர், சந்திரசேகரராஜு வரவேற்றார். மொழிப்புல முதன்மையர், முனைவர் இரா. முரளிதரன் வாழ்த்துரை வழங்கினார். முனைவர் இரா. காமராசு நன்றியுரை வழங்கினார்.



## கல்வியியலில் மொழித் தொழில் நுட்பத்தின் பங்கு - பன்னாட்டுப் பயிலரங்கு

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 20-09-2018 அன்று தமிழ் அறிதம் (அமெரிக்கா) அமைப்புடன் இணைந்து "கல்வியியலில் மொழித் தொழில் நுட்பத்தின் பங்கு" என்ற தலைப்பில் ஒரு நாள் பன்னாட்டுப் பயிலரங்கு நடைபெற்றது.

மொழியை எழுதக்கூடிய தொழில்நுட்பம், காலந்தொறும் மாறிக்கொண்டே இருக்கிறது. மாற்றத்திற்கேற்ப ஆசிரியர்களும் தங்களைத் தகவமைத்துக் கொள்கிறார்கள். இப்போது, கூகுள்தான் ஆசிரியர் என்று சொல்கிறார்கள். கணினிதான் எல்லாம் என்ற நிலை வந்துவிட்டது. எனினும், எத்தனைத் தொழில்நுட்பம் வளர்ந்தாலும், ஆசிரியரின் இடத்தை அவை நிரப்ப இயலாது. எத்தனை ஆண்டுகாலம் வந்தாலும் மனிதனுடைய மனத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய இயந்திரம் ஒன்று வரப்போவதில்லை. மாணவர்களுடைய மனத்தைப் புரிந்துகொண்டு பாடம் சொல்லிக்கொடுப்பதற்கு ஆசிரியர்களால் மட்டும்தான் முடியும். எனவே, கணினி வழியாக உங்கள் கல்விப் பணியை மேன்மைப்படுத்திக்கொள்ளலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழ் என்பது உலக மொழியாகிவிட்டது. காரணம் தமிழர்கள் இல்லாத கண்டமே இல்லை. அந்தத்

தமிழர்களுக்கு, அவர்களுடைய அடையாளம் என்பது ஒரு சிக்கலாக உள்ளது. அந்த அடையாளத்திற்காக ஏங்குபவர்களுக்கு, அந்த அடையாளத்தை அளிப்பது தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகும். இப்பணியைச் செய்யத் தமிழகஅரசு இந்தஆண்டு 27 இலட்சம் தொகையை நல்கையாக வழங்கியுள்ளது. மியான்மரிலும், தென்னாப்பிரிக்காவிலும் உள்ள தமிழர்களுக்குத் தமிழ் பயிற்றுவிப்பதற்காகவும், தமிழ்ப் பண்பாட்டு உணர்வை ஊட்டுவதற்காகவும் மார்ச் 2019-க்குள் தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் அங்கே சென்று முறையாகத் தமிழ்ப் பயிற்றுவித்துப் பண்பாட்டு உணர்வுகளை எடுத்துரைத்து வருவார்கள் என்றார், துணைவேந்தர்.

மொழிப்புல முதன்மையர் முனைவர் இரா.முரளிதரன் வரவேற்றார். பாரதியார் பல்கலைக்கழக, மொழியியல் துறை மேனாள் தலைவர், முனைவர் த.முத்துகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினார். அமெரிக்கா தமிழ் அறிதம் செயலாளர் முனைவர் அ.காமாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக மொழியியல்துறைப் பேராசிரியர் முனைவர் கா.உமாராஜ், கிருஷ்ணகிரி அரசு மகளிர் கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் வ.தனலட்சுமி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இலக்கணத்துறை மேனாள் தலைவர், முனைவர் து.சேதுபாண்டியன் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். பேராசிரியர் கு.சின்னப்பன் நன்றியுரை ஆற்றினார். முனைவர் கி.பெருமாள் இணைப்புரை வழங்கினார்.



06-12-2018

## அண்ணல் அம்பேத்கர் நினைவுநாள்

06.12.2018 அன்று தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அண்ணல் அம்பேத்கர் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ச.முத்துக்குமார், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டனர்.



## கஜா புயல் நிவாரண உதவிகள்....26-08-2019

தமிழ்ப் பல்கலைக்கழகமும் ரெகன்பொக் இந்தியா பவுண்டேஷனும் இணைந்து, கஜா புயலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நடமாடும் மருத்துவமனை திட்டம் சார்பாக, கோட்டூர் மற்றும் கோட்டூர்த் தோட்டம் பகுதியில் உள்ள 500 நபர்களுக்கு மருத்துவ சோதனை செய்யப்பட்டு மருந்துகளும் அளிக்கப் பட்டன. இம்மருத்துவ முகாமைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், தொடங்கி வைத்தார். மேலும் கீழப்பள்ளிசந்தம் கிராமத்தில் ரூபாய் 300 மதிப்புள்ள 14 மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன. கோட்டூர், ஜீவா நகரைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்குத் தார்ப்பாய்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், ரெகன்பொக் இந்தியா பவுண்டேஷன் மேலாண்மை இயக்குநர் மதன்மோகன், மருத்துவர்கள் சி.சீனிவாசன், பி.வீரா, அரிமா சங்க உறுப்பினர்கள், தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டு நலப் பணித் திட்டஒருங்கிணைப்பாளர் ஞா.பழனிவேலு, உடற்கல்வி ஆசிரியர் செ.பிரபாகரன், நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.



20-05-2019

தேசிய உயர்கல்வி ஆணையம் (RUSA) எனப்படும் நடுவணரசு நல்கைக்கான கலந்தாய்வுக்கூட்டத்தில் துணைவேந்தர், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள்......





## நாட்டுப்புறக் கலைப் பண்பாட்டுப் பயிற்சிப் பட்டறை

தமிழ்நாடு கலைப் பண்பாட்டுத்துறையின் ஆதரவோடு, மலேசிய செபஸ்தியார் கலைக்கூடத்தின் சார்பாக, நாட்டுப்புறக் கலைப் பண்பாட்டுப் பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. இப்பயிற்சியில் மலேசியா நாட்டிலிருந்து பதினாறு மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.11-12-2018 முதல் 26-12-2018 வரை நடைபெற்ற இப்பயிற்சியில் 10 மாணவர்களும், 6 மாணவியரும் கலந்துகொண்டனர். இப்பயிற்சியில் நாட்டுப்புறக் கலைகளான நையாண்டிமேளம், நாட்டுப்புறப்பாடல், கரகாட்டம், காவடியாட்டம், கோலாட்டம், சிலம்பாட்டம், பறையாட்டம் போன்ற பலவகையான கலைகள் பயிற்றுவிக்கப்பட்டன.

நிறைவு விழாவில் துணைவேந்தர் பேசியதாவது: இப்பயிற்சி, தஞ்சாவூரில் நடப்பதுதான் சரியாக இருக்கும் ஏனென்றால் தமிழர்களுடைய கலைகளின் தலைமையிடம் தஞ்சை என்று சொன்னால், யாரும் மறுக்கமாட்டார்கள். அந்தவகையில், இந்த மாணவ மாணவியர்கள் திறமையை மேலும் செம்மைப் படுத்திக்கொண்டு, புதிய நுட்பங்களைக் கற்றுக் கொண்டு, மலேசியாவிற்குச் செல்லவிருக்கிறார்கள். இந்தப் பல்கலைக்கழகத்தில் நாடகத்துறையும், நாட்டுப்புறத் துறையும்தான் செல்வாக்கிழந்த பல கலைகளை மீண்டும் மீட்டுருவாக்கம் செய்தது. குறிப்பாக, தப்பாட்டம் என்ற கலை, தற்போது திரைத்துறையில் மேலோங்கி இருக்கிறது என்றால், அக்கலையை மீட்டுருவாக்கம் செய்தது தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகும். அது, தற்போது மலேசியா வரை சென்றுள்ளது. அந்த வகையில் இதைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடத்தியது மிகச்சரியானது. எனவே, பல்கலைக்கழகம் இதுபோன்ற கலைகளை ஊக்குவிப்பதற்குத் தயாராக இருக்கிறது. புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு, நீங்கள் சொல்லிக் கொடுக்கும் கலைகளுக்கு, தமிழ்ப்பல்கலைக்கழகம் முறைப்படி சான்றிதழ்கள் வழங்குவதுடன் உங்களுக்கு எப்போதும் துணைநிற்கும் என்றார், துணைவேந்தர்.

மலேசிய, செபஸ்தியார் கலைக்கூடத்தின் ஒருங்கிணைப்பாளர் செபஸ்தியன், நாட்டுப்புறக் கலைஞர் சின்னப்பொண்ணு, ஆட்சிக்குழு உறுப்பினர்கள், துறைத்தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



## ‘நல்ல தமிழில் பேசுபவர்களுக்கு மதிப்புக் கூடுகிறது’

பல்கலைக்கழக, வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் மையம் சார்பில் 04-03-2019 அன்று நடைபெற்ற, தமிழ் மொழித்திறன் பயிலரங்கத் தொடக்கவிழாவில் தலைமை உரையாற்றினார் துணைவேந்தர்.

ஒரு மனிதனுடைய ஆளுமையை வெளிப் படுத்துவதற்கு மிக இன்றியமையாதது, மனிதனுடைய மொழித்திறன். எவ்வளவுதான், கல்வி அறிவு பெற்றிருந்தாலும், அவையறிந்து வெளிப்படுத்த இயலவில்லை என்றால், அக்கல்வி வீணாகிவிடும். எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்கும்போதும், தமிழைச் சொல்லிக் கொடுக்கும்போதும், அதில் தவறில்லாமல் எழுதுவதற்கும், பேசுவதற்கும் பயிற்சி கொடுக்க வேண்டியது அவசியம். அந்தவகையில், ஆளுமைத் திறன் மிக முக்கியமானது. ஆங்கிலத்தில் பேசுவதால், அவர்களுக்கு மதிப்பு வந்துவிடுகிறது என நினைக்கின்றனர். அது உண்மையிலேயே தவறு. நல்ல தமிழைப் பேசுபவர்களுக்கு உண்மையில் மதிப்பு கூடுகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் படித்து வெளியேறுகிற மாணவர்கள் அனைவரும், தமிழில்

எழுதும்போது தவறின்றி எழுதிப்பழகுவோம் என, உறுதி கொள்ளவேண்டும் என்றார், துணைவேந்தர்.

தமிழில் பிழையின்றி எழுதுவது எப்படி என்ற தலைப்பில் முனைவர் மருதூர் அரங்கராசன் பேசினார். மொழிப்புல முதன்மையர் இரா.முரளிதரன் வாழ்த்துரை ஆற்றினார். வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் மைய ஒருங்கிணைப்பாளர் கு.சின்னப்பன், உதவிப்பேராசிரியர் இரா.சீனிவாசன், முனைவர் பட்ட ஆய்வாளர் அ.வெண்ணிலா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



21-02-2019

## ஆங்கில மொழித்திறன் பயிலரங்கம்

வேலை வாய்ப்பு வழிகாட்டுதல் மையத்தின் சார்பாக, ஒரு மாத கால ஆங்கில மொழித்திறன் பயிலரங்கத்தின் தொடக்கவிழா நடைபெற்றது.

தமிழகத்தில் இருமொழிக்கொள்கையைப் பயன்படுத்தி வருகிறோம். முதல்மொழி தமிழும், இரண்டாவதுமொழி ஆங்கிலமும் ஆகும். ஆங்கிலத்தைப் படிப்பதற்காக, மாணவர் செலவிடக் கூடிய நேரம் தொடக்கப் பள்ளியிலிருந்து, இளங்கலைக் கல்விவரை அமைகிறது. ஆனால், பெரும்பான்மையான மாணவர்கள் ஆங்கிலம் சரிவரக் கற்றுக்கொள்ள முடிவதில்லை. ஆங்கிலம் வராது என்று நீங்கள் நினைத்தால் அது வராது; முடியும், கற்றுக்கொள்வேன் என்று நினைத்தால் உங்களால் முடியும். ஆங்கிலப் புலமை பெற்றிருந்த தமிழ்ச் சான்றோர்களும், தமிழில் புலமைபெற்ற ஆங்கிலப் பேராசிரியர்களும் புகழடைந்துள்ளார்கள். எனவே, பல்கலைக்கழக மானியக்குழு நல்கையுடன், ஒரு மாதம் நடக்கும் இந்த ஆங்கில மொழித்திறன் பயிலரங்கை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார் துணைவேந்தர்.

முன்னதாக, இளங்கல்வியில் மாணவி ரம்யா வரவேற்றார். பூண்டி, திருப்புட்பம் கல்லூரி மேனாள் பேராசிரியர் முனைவர் வீ.ரா.அங்கப்பன் " ஆங்கில மொழித்திறன் கற்றல்" என்ற தலைப்பில் கருத்துரைத்தார்.

ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் இரா.முரளிதரன், முனைவர் கு.சின்னப்பன் கலந்து கொண்டனர். மாணவி ம.நந்தினி நன்றி கூறினார்.



## பெருந்திரள் இணையவழிக் கற்கை (MOOC) பயிலரங்கு(22-03-2019)

பெருந்திரள் இணையவழிக் கற்கை (MOOC) பயிலரங்கைத் தொடங்கி வைத்த துணைவேந்தர், மொழி, பண்பாடு ஆகியவற்றைக் கற்பித்தலில் உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்களுக்குத் தமிழ்மொழியையும், தமிழ்ப்பண்பாட்டையும் கொண்டுசெல்வது, அவர்கள் தமிழ்மொழியைப் பாதுகாத்து வைத்துக்கொள்வதற்கும், பண்பாட்டை வளர்த்தெடுப்பதற்கும் உதவி செய்வது, தலையாய நோக்கங்களில் ஒன்று. அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், தமிழக அரசு, தமிழ்ப் பண்பாட்டு மையம், தமிழ் வளர்மையம் என, இரண்டு மையங்களை அனுமதித்து அதற்கான நிதி உதவியும் செய்துவருகிறது என்றார். அந்த இரண்டு மையங்கள் வழியாக, நாம் உலகெங்கும் இருக்கும் தமிழர்களுக்கு, இணையம் வழியாகத் தமிழையும் பண்பாட்டையும் கற்பிக்க இருக்கின்றோம். அதற்காகக் கேள்வி - காட்சி மைய ஆய்வரங்கு உருவாக்க இருக்கிறோம். அந்த ஆய்வகத்தில், பாடங்களைப் பாட்டுகள், நடனங்கள் வழியாகப் பயிற்றும் வகையில், தமிழ்மொழிக்கான பாடங்கள் அனைத்தையும் பதிவுசெய்து உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்களுக்கு இணையம் வழியாகக் கற்பிக்க இருக்கின்றோம்.

பல்கலைக்கழகத்தில் இருக்கக்கூடிய ஆசிரியர் பெருமக்கள் இந்தியாவிலும் உலகத்திலும் இருக்கக் கூடிய நம்முடைய மக்களுக்கு அறிவை எப்படிப் பரப்பமுடியும் என்பதற்கு, பல்கலைக் கழகமானியக்குழு வசதி செய்து கொடுத்திருக்கின்றது. அந்த வகையிலும்,

MOOC என்று சொல்லக்கூடிய ஊடகம் மூலமும் முயற்சிகள் மேற்கொள்ளவுள்ளோம் என்று தொடக்கவுரையில் துணைவேந்தர் குறிப்பிட்டார்.

திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் முனைவர் ப.சீனிவாசன், கேரள மத்தியப் பல்கலைக்கழக உதவிப்பேராசிரியர் முனைவர் கா.தியாகு, மதுரை தியாகராஜர் கல்வியியல் கல்லூரி உதவிப்பேராசிரியர் சு.இராஜ்குமார், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உதவிப்பேராசிரியர் முனைவர் ஞா.சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## உலகத் தாய்மொழிநாள் (21-02-2019)

உலகத் தாய்மொழிநாள் விழா துணைவேந்தர் தலைமையில் நடைபெற்றது.

"எத்தனை மொழிகளை நீங்கள் தெரிந்து வைத்திருந்தாலும் நமது தாய்மொழி ஒன்றுதான், நம் உயிரோடும் உணர்வோடும் கலந்திருப்பது. அந்த வகையில் உலக மொழிகளில் தன்னிகரற்று நிற்கும் மொழியாகும். ஆனால் தமிழுக்கான இடம், பொதுப் புத்தியில் எப்படி இருக்கிறது. பொது வெளியில், மக்களின் மனப்பான்மை எப்படி இருக்கிறது என்று சற்றுச் சிந்திப்போமானால், மெச்சிக்கொள்ளும் வகையில் நாம் தமிழைப் பயன்படுத்தவில்லை என்ற உண்மையை, ஏற்றுக்கொள்ள வெண்டும். ஏனென்றால், ஆங்கிலத்தில் பேசுவதும் ஆங்கிலம் கலந்து பேசுவதும் மதிப்பு மிகுந்தது என்றும் நம்மில் பலரும் நினைக்கின்றோம். படித்தவர்கள் இந்த மனப் பான்மையை மாற்றிக் கொண்டால், பொதுமக்களும் மாறுவார்கள் என்று எண்ணுகிறேன். இந்தத் தாய் மொழிநாளில் நாம் எடுக்கவேண்டிய உறுதிமொழி: இயன்ற இடங்களிலெல்லாம், தமிழைப் பயன் படுத்துவோம். ஆங்கிலக் கலப்பின்றி பேசுவோம். தமிழ் பேசுவதைப் பெருமையாகக் கொள்வோம்.

பன்மொழிச் சூழலில், பண்பாட்டு வேறுபாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவற்காகவே யுனெஸ்கோ, 1999-இல் உலகத் தாய்மொழிநாள் என்பதை அறிவித்தது. ஒவ்வொரு இரண்டு வாரத்திற்கும் ஒரு மொழி இப்பூமிப்பந்திலிருந்து காணாமல் போவதாகச் சொல்கிறார்கள். 40 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட மக்கள், தம்முடைய தாய்மொழியில் கல்வி கற்க வாய்ப்பு வழங்கப் படுவதில்லை என்றும் சொல்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஒரு பொருண்மையை வைத்துதான் தாய்மொழி நாள் கொண்டாடுகிறார்கள். இந்த ஆண்டு 'மண்ணின் மொழிகளுக்கான ஆண்டாக' அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த உலகில் எல்லா உயிர்களுக்கும் வாழ்வதற்கு உரிமை இருக்கிறது, அதுபோல எல்லா மொழிகளுக்கும், எல்லாப் பண்பாட்டுக்கும்; இடம் இருப்பதை நாம் ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு உரிய இடத்தை வழங்கி, அவர்கள் மொழிகளைப் பேசுவதற்கும் ஊக்கம் அளித்துப் பன்மொழிச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றார், துணைவேந்தர். மிகச்சிறந்த சிறப்புப் பொழிவை சிந்தைக்கு விருந்தாக்கினார், சிறப்பு விருந்தினர் செந்தலை கவுதமன். உடன் பதிவாளர் முத்துக்குமார், பேராசிரியர் இளையாப்பிள்ளை, பேராசிரியர் கவிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.



## மனித உரிமைக் கல்வி - தேசியக் கருத்தரங்கம்

பல்கலைக்கழக மானியக்குழுவின் 12-வது ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ் "மனித உரிமைக் கல்வி" என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் 14-03-2019 அன்றுநடைபெற்றது.

தன்னுடன் வாழக்கூடிய, சகமனிதனுக்குக் கொடுக்க வேண்டிய, உரிமையை ஒவ்வொருவருக்கும் கொடுப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த

மனிதன், இனத்தால் சாதியால், நிறத்தால், சமயத்தால், தேசியத்தால் , வயதால், உடலால் வேறுபட்டிருக்கலாம். வரலாற்றில், மனிதஉடல்தான் மிக அதிக அளவில் மனித உரிமை மீறல்களுக்கு ஆட்பட்டிருகின்றது. மனிதக் கண்டுபிடிப்புகளில், மனிதனை எப்படி யெல்லாம் வதைக்கலாம் என்பதற்குப் பல்வேறு கருவிகள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட, சமூக மீறல்கள் நம் சமுகத்தில் நடந்துகொண்டேதான் இருக்கின்றன. அரசியல் அமைப்புச்சட்டத்தில் சமத்துவம், பேச்சுரிமை, பண்பாட்டு மற்றும் கல்வி உரிமை போன்ற சட்டங்கள் எல்லாம் இயற்றப் பட்டுள்ளன என்று பேசினார் துணைவேந்தர். நிகழ்வில் ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா.முத்தையன் வரவேற்றார். தஞ்சாவூர் மாவட்ட ஓய்வுபெற்ற இணை காவல் கண்காணிப்பாளர் கெ.மாணிக்கவாசகம், சென்னை, குழந்தைகள் பாதுகாப்பக அமைப்பின் இயக்குநர் எ.தேவநேயன், மதுரை இந்திய வழக்கறிஞர்கள் சங்கச்செயலாளர் கு.சாமிதுரை, திருவாரூர் மத்தியப்பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் முனைவர் ப. சீனிவாசன் ஆகியோர், உரை நிகழ்த்தினர். உதவிப்பேராசிரியர் முனைவர் தெ.வெற்றிச்செல்வன் தொகுப்புரை வழங்கினார். உதவிப் பேராசிரியர் முனைவர் இரா. ஆனந்தஅரசு நன்றி கூறினார்.



திறந்தவெளி அரங்கில், ஒளிவெள்ளத்தில் ஒரு நாடகக் காட்சி…

2019 மார்ச் 18-ஆம் தேதி தொடங்கி 23-ஆம் தேதிவரை ஆறு நாட்களுக்கு, தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் தென்னகப் பண்பாட்டு மைய நல்கையில், நவீன நாடகக் கலைவிழா கோலாகலமாக நடந்தது. நாடகத்துறைத் தலைவர் பேராசிரியர் கோவிந்தசாமி சிறப்பாக ஒருங்கிணைத்த இந்நிகழ்வு, 10-க்கும் மேற்பட்ட நாடகங்களை அரங்கேற்றி, பரவலான வரவேற்பைப் பெற்றது.



23-03-2019 அன்று நவீன நாடகவிழாவில் சிறப்புரையாற்றுகிறார், நாடகம் மற்றும் திரைப்படக் கலைஞர் சந்திரா. மேடையில், மாண்பமை துணைவேந்தர், ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் பா. ஷீலா, நாடகத்துறைத் தலைவர் முனைவர் பெ.கோவிந்தசாமி, கலை பண்பாட்டு இயக்குனர் குணசேகரன், சீ.அறிவுறுவோன், முனைவர் தெ.வெற்றிச்செல்வன், தென்னகப் பண்பாட்டுமைய துணை இயக்குனர் தைரியராஜ் ஆகியோர்….



23-03-2019

நாடகவிழாவில், ‘பெத்தவன்கதை’ நாடக இயக்குனர், முனைவர் ராஜூ அவர்களுக்கு, அன்னை வேளாங்கண்ணி கலை அறிவியல் கல்லூரி காட்சித் தொடர்பியல் துறைத்தலைவர் அருட்தந்தை ஆரோக்கியதாஸ் நினைவுப்பரிசு வழங்குகிறார். உடன், நாடகத்துறைத் துறைத்தலைவர் பேராசிரியர் பெ.கோவிந்தசாமி, பேராசிரியர் கு.சின்னப்பன் மற்றும் நாடகக் கலைஞர்கள்…..



26-01-2019

குடியரசுதினவிழா கலை நிகழ்வில் தமிழ்ப்பண் பாட்டு மைய கலைஞர்களின் கலை நிகழ்ச்சி…..


23-10-2018

## தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு சிங்கப்பூர்ப் பள்ளி மாணவர்கள் வருகை

சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் கீழ் உள்ள பார்ட்லீ உயர்நிலைப்பள்ளியில் தமிழ் பயிலும் 15 மாணவர்களும் ஆசிரியர்களும் பல்கலைக் கழகத்தில் உள்ள துறைகளைப் பார்வையிட, வருகை புரிந்தார்கள். பள்ளி மாணவர்களை வரவேற்றுப் பேசினார், துணைவேந்தர்.

தமிழ்மொழி முதன்முதலில் கல்வெட்டுகளிலும், பின்பு ஓலைச்சுவடிகளிலும், ஏடுகளாகவும் தட்டச்சாகவும், தற்பொழுது கணினி வடிவத்திலும் எழுதப்பட்டு வந்துள்ளது. காலந்தோறும் தமிழ்மொழி மாறிக்கொண்டே வருகிறது. கணினியில் தமிழ் மொழியின் பயன்பாடும் மாறிக்கொண்டே வருகிறது. எனவே, அதை நோக்கி நீங்களும் செல்ல வேண்டும் என்றார். மேலும், தமிழ் தெரிந்தவர்களிடம் தமிழில் பேசுங்கள், பிறரிடம் பிறமொழியில் பேசுங்கள். தமிழ்மொழி பேசும்பொழுது பிற மொழி கலப்பில்லாமல் பேசவேண்டும். அதுதான், தமிழுக்கு நீங்கள் செய்யும் மிகப் பெரிய தொண்டாகும் என்றார், துணைவேந்தர். சிங்கப்பூர் மாணவர்கள், துணைவேந்தரிடம் தமிழ் மொழி பற்றியும், தமிழ்ப்பண்பாடு பற்றியும் ஆர்வமாகக் கேள்விகள் கேட்டு விளக்கம் பெற்றனர்.



“தமிழ்ப் பல்கலைக்கழகம் முதன்மையான இடத்தை எட்ட வேண்டும்”

அமைச்சர் க. பாண்டியராஜன் பேச்சு

சிற்பக்கலைப் பயிற்சித் திட்டம் மற்றும் யோகா மையத் தொடக்கவிழா, 04-03-2019 அன்று நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழக இணைவேந்தரும், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சருமான க.பாண்டியராஜன் பேசியதாவது: தமிழ்ப்பல்கலைக்கழகம் தற்போது யூஜிசி மதிப்பீட்டில், பெருமளவுக்குத் தகுதிபெற்றுள்ளது. கடந்த அக்டோபர் மாதம் பி.பிளஸ் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

தனித்தனி சிற்பக்கலை உத்திகளைக் கொண்ட மாநிலம் தமிழகம். 2 நாளைக்கு ஒரு புதையல் கிடைக்கும் மாநிலமாகத் தமிழகம் உள்ளது. ரூ.16 கோடிக்கு, தமிழ் அன்னைக்குச் சிலை வைக்க, டெண்டர் விட்டுள்ளோம். தமிழக அரசே சிற்பக்கலைக்கூடம் அமைக்க ரூ.5 கோடி நல்கை அளிக்கிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏபிளஸ் பிளஸ் அங்கீகாரத்தை பெற முயற்சி எடுக்க வேண்டும். இதன்மூலம், இந்தியாவில் உள்ள 60 மொழி சார்ந்த, பண்பாடு சார்ந்த பல்கலைக்கழகங்களில், முதன்மையான பல்கலைக்கழகம் என்ற இடத்தை தமிழ்ப்பல்கலைக் கழகம் எட்ட முடியும் என்றார்.



## உ.வே.சா. பிறந்த நாள் விழா

உ.வே.சா. பிறந்த உத்தமதானபுரத்தில், 19-02-2019 அன்று நடைபெற்ற உ.வே.சா. பிறந்த நாள் விழாவில், துணைவேந்தர் மாலை அணிவிக்க, உடன் பதிவாளர், சுவடிப்புல முதன்மையர், மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் அரசு அலுவலர்களும்.......



## திங்கள்தோறும் திருக்குறள்

தமிழ்ப்பல்கலைக்கழகமும் திருக்குறள் பேரவையும் இணைந்து நடத்திவரும், திங்கள்தோறும் திருக்குறள் நிகழ்ச்சியில் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியர் கு.வெ.பாலசுப்ரமணியம், திருக்குறளை ஆழமும் விரிவும் தேடி, கூர்ந்தாய்வு நுட்பத்துடன் தொடர் வகுப்பு நிகழ்த்தி வருகிறார். 05-03-2019 அன்று நடைபெற்ற நிகழ்வில், அவர் இலக்கியத்துறை ஆய்வுமாணவர் மோகன்ராஜுக்கு, ஊக்கப்பரிசு வழங்க, உடன் உதவிப்பேராசிரியர் தனலட்சுமி, மற்றும் திருக்குறள் பேரவையைச் சேர்ந்த பழ.மாறவர்மன் ஆகியோர்.........



## தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமிழ் கற்பிக்க பர்மா பயணம்

உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்துவரும், தமிழர்களுக்கு அவர்களுடைய அடையாளம் என்பது ஒரு சிக்கலாக உள்ளது. அந்த அடையாளத்திற்காக ஏங்குபவர்களுக்கு அந்த அடையாளத்தை அளிப்பது தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகும். மியான்மரிலும் தென்னாப்பிரிக்காவிலும் உள்ள தமிழர்களுக்குத் தமிழ் பயிற்றுவிப்பதற்காகவும், தமிழ்ப் பண்பாட்டு உணர்வை ஊட்டுவதற்காகவும் தமிழக அரசு இந்த ஆண்டு வழங்கியுள்ள 27 இலட்சம் தொகையை நல்கையாகக் கொண்டு, தமிழ்ப் பல்கலைக் கழகத்திலிருந்து 2019-பிப்ரவரித் திங்களில் மியான்மர் சென்று முறையாகத் தமிழ் பயிற்றுவித்துப் பண்பாட்டு உணர்வுகளை எடுத்துரைத்து வந்த, ஆசிரியர்களுக்கு 04-03-2019 அன்று பாராட்டு தெரிவித்தார், துணைவேந்தர். உடன் பதிவாளர், முனைவர் கோ.ப.நல்லசிவம், முனைவர் தெ.வெற்றிச்செல்வன், முனைவர் முரளிதரன், முனைவர் இரா.குறிஞ்சிவேந்தன், முனைவர் இரா.காமராசு, முனைவர் ஞா.பழனிவேலு, முனைவர் கண்ணன், முனைவர் பெருமாள் ஆகியோர்.



06-10-2018 முதல் 09-10-2018 வரையான நாட்களில் பல்கலைக்கழகத்துக்கு, தேசியத் தர மதிப்பீட்டுக் குழு வந்தபோது......



தேசியத் தர மதிப்பீட்டுக் குழு தமிழ்ப் பல்கலைக்கழக, மூலிகைப்பண்ணையைப் பார்வையிட்ட போது....



தேசியத் தர மதிப்பீட்டுக்குழு பல்கலைக்கழக கேள்வி-காட்சிமையத்தைப் பார்வையிட்டபோது....



தேசியத் தர மதிப்பீட்டுக்குழுவிடம் பல்கலைக்கழக அறிக்கையை துணைவேந்தர் அளித்தபோது....



பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட 1981 முதல் இதுவரை 38 ஆண்டுகளாக நடைபெற்றுள்ள ஆய்வுகள், ஆய்வுத்திட்டங்கள், குறித்து விரிவாக மதிப்பிட்டால்தான் எதிர்கால ஆய்வுப் பயணத்தைத் திட்டமிடமுடியும் என்ற நோக்கில், 28-04-2019 அன்று ஆய்வுத்தகைமையர்கள் கூட்டம் நடைபெற்றது. பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு மைல்கல் என்று குறிக்கத்தக்க நிகழ்வு இது எனலாம். தமிழ்ப்பல்கலைக் கழக மூத்த பேராசிரியர்கள் ஆய்வறிஞர்கள் பேராசிரியர் சோ.ந.கந்தசாமி, பேராசிரியர் ஒய்.சுப்பராயலு, பேராசிரியர் கி.அரங்கன், புதுவை பிரெஞ்சு மொழியியல் நிறுவனப் பேராசிரியர் கி. நாச்சிமுத்து, பாரதியார் பல்கலைக்கழக மூத்த பேராசிரியர் ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு மதிப்புரையையும் எதிர்காலத்திட்டமிடல் குறித்த ஆலோசனைகளையும் வழங்கினர். இதன் தொடர்ச்சியாக, செய்யவேண்டிய பணிகள் குறித்த வழிகாட்டுதல் அடிப்படையில் 30-க்கும் மேற்பட்ட புதிய ஆய்வுத்திட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.




தேசியக் கல்விப்புல வைப்பகம்
(NATIONAL ACADEMIC DEPOSITORY - NAD)
கூட்டத்தில் துணைவேந்தர்



தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு மத்திய அரசு ரூ.20 கோடி ஒதுக்கீடு

பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விடுதலைநாள் விழாவில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து

துணைவேந்தர் பேசியது: தமிழ்ப் பல்கலைக்கழகம் வருங்காலங்களில் புதிய உயரங்களை எட்ட வேண்டும். தமிழுக்கென்றே உருவாக்கப்பட்ட உயராய்வு நிறுவனம் தமிழ்ப் பல்கலைக்கழகம். இப்பல்கலைக்கழகத்தின் முயற்சிக்குத் தமிழக அரசு கைக்கொடுத்திருக்கிறது. ஒரு புலத்துக்கு இருவர் வீதம் 10 வருகைதரும் பேராசிரியர்களையும், 5 இலக்கிய ஆளுமைகளையும் அழைப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் மூலம், பல்கலைக்கழகத்தில் நடைபெறும் ஆய்வுகளுக்கும் கல்விச் சூழலுக்கும் வலுசேர்ந்துள்ளது.

மேலும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மூலம் சிறந்த ஆய்வாளர்களை உருவாக்கவும், பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்துடனும், நிகழ் கல்வியாண்டு முதல் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலைக்கல்வி, தமிழ், வரலாறு ஆகிய துறைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதை ஊக்குவிக்கும் விதமாக, ஐந்தாண்டு முதுகலைத் தமிழ் பயிலும் 45 மாணவர்களுக்கு மாதத்துக்கு ரூ.2000 வீதம் உதவித் தொகையை வழங்க தமிழக அரசு முன்வந்துள்ளது.

கடந்த ஆண்டு தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு, பி பிளஸ் கிடைக்கப் பெற்றதன் விளைவாக, மத்திய அரசின் தேசிய உயர்கல்வி ஆணையம் (RUSA) நல்கை ரூ.20 கோடி கிடைத்துள்ளது. இதுபோல விரைவில் என்.ஐ.ஆர்.எப் அமைப்பில், தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் பதிவு செய்து, இந்தியப் பல்கலைக் கழகங்களின் வரிசையில், சிறப்பான இடத்தைப் பெறுவதே நமது அடுத்த இலக்காக அமைய வேண்டும் என்றார் துணைவேந்தர்.

இந்நிகழ்ச்சியில் அமெரிக்காவைச் சேர்ந்த பொற்செழியன் ராமசாமி, திருப்புவனம் ஆத்மநாதன் ஆகியோரை துணைவேந்தர் கௌரவித்தார். தேசத்தந்தை மகாத்மா காந்தியின் 150-வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது சத்திய சோதனை நூலில் இருந்து நடத்தப்பட்ட வினாடிவினாவில் முதல் மற்றும் இரண்டாம் பரிசுகள் பெற்ற இலக்கியத்துறை மாணவிகள் இள.அபிராமி, உ.மரகதவள்ளி ஆகியோருக்கு ரூ.5000- ரொக்கப்பரிசையும் ரூ.3000 ரொக்கப்பரிசையும், சான்றிதழையும் துணைவேந்தர் வழங்கினார். விழாவில் பதிவாளர் (பொ) கு.சின்னப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




## ‘தமிழ் நாவல் எழுத்தில் அண்மைக் காலப் போக்குகள்’

சாகித்திய அகாதெமியும் தமிழ்ப் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய ‘தமிழ் நாவல் எழுத்தில் அண்மைக் காலப் போக்குகள்’ எனும் தலைப்பில் ஒருநாள் உரையரங்கம் நடைபெற்றது. இவ்வுரையரங்கில் துணைவேந்தர் கோ.பாலசுப்ரமணியன் தலைமையேற்க, பெங்களூரு சாகித்ய அகாதெமி மண்டலச் செயலாளர் எஸ்.பி.மஹாவிக்னேஷ்வர் வரவேற்றார். சாகித்திய அகாதெமி பொதுக்குழு உறுப்பினர் தமிழவன் மையக் கருத்துரை வழங்கினார். பிறகு நடைபெற்ற அமர்வுகள், நா.சிவசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இவ்வமர்வுகளில் எழுத்தாளர்கள் ஜி.குப்புசாமி, த.விஷ்ணுகுமரன் ஆகியோர் கலந்து கொண்டனர். பிற்பகல் நடைபெற்ற அமர்வில், ந.முருகேசபாண்டியன் தலைமையேற்றார். இவ்வமர்வுகளில் பேராசிரியர்கள் குமாரசெல்வா, இரா.கந்தசாமி, நிதா எழிலரசி ஆகியோர் கலந்து கொண்டனர். மொழிப்புலத் தலைவர் முனைவர் இரா.காமராசு நன்றியுரை கூறினார்.



## ‘செந்திணை நண்பர்கள்’ அமைப்பு தொடக்கம்

சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்கள், இளைஞர்களிடையே கொண்டுசேர்க்கும்

வகையில், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 'செந்திணை நண்பர்கள்' என்ற அமைப்பு, 15-08-2019 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

இந்திய விடுதலை நாள் விழாக் கொண்டாட்டத்தின் முக்கிய நிகழ்வாகவும், மகாத்மா காந்தியின் 150-வது ஆண்டு பிறந்த நாளை நினைவுகூறும் வகையிலும், தமிழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் இணைந்து, இந்த அமைப்பை ஏற்படுத்தி உள்ளனர்.



இந்த அமைப்பைத் துணைவேந்தர் தொடங்கி வைத்துப் பேசினார். பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் இணைந்து உருவாக்கியுள்ள இந்தத் தன்னார்வ அமைப்பு, பல்கலைக்கழகத்தில் தூய்மைப் பணியை மேற்கொள்ளவும், கல்விசார் பணிகளுடன், சமூகம் சார்ந்த பணிகளிலும் அக்கறை செலுத்துவது அவசியம் என்ற மாண்பின் படியும், சுற்றுச்சூழல் மிகவும் சீர்கெட்டு வரும் இவ்வேளையில், நாம் பிறருக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழகம் குடிநீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் சூழல் உருவாகியுள்ளதால், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் அவசியம். நீர்நிலைகளைத் தூய்மைப் படுத்துவது முக்கியம். எனவே, சுற்றுச் சூழலை காக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை மக்களிடையேயும், இளைஞர்களிடையேயும் கொண்டு சேர்க்கும் வகையில், இந்த அமைப்பு செயல்படும் என்றார்.

நிகழ்ச்சியில், பதிவாளர் கு.சின்னப்பன், பேராசிரியர்கள், பணியாளர்கள், மாணவ மாணவிகள் பல்கலைக்கழக வளாகத்தைத் தூய்மை செய்தனர்.

# செய்திக்குறிப்பு...

## பல்கலைக்கழகத்தில் ஒருங்கிணைந்த முதுகலைப் படிப்புகள் தொடக்கம்

2019-20 ஆம் கல்வி ஆண்டுக்கான ஒருங்கிணைந்த முதுகலைத் தமிழ் மற்றும் வரலாறு, முதுகலை நாடகம் மற்றும் அரங்கக்கலை, முதுகலை கடல்சார்வரலாறு, முதுகலை கல்வெட்டியல் மற்றும் தொல்லியல், முதுகலைத்தமிழ் ஆகிய முதுகலை வகுப்புகள் தொடங்கப்பட்டன.

இந்த வகுப்புகளைத் தொடங்கிவைத்த துணைவேந்தர் பேசியது:

பிளஸ் 2 படித்த கிராமப்புற மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப்படிப்பு படிக்கும் வாய்ப்பைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தித் தந்துள்ளது. இப்பல்கலைக் கழகத்தில் நாடகத்துறை தொடங்கப்பட்டு, 35 ஆண்டுகளாகின்றன. தற்போது தமிழகப் பல்கலைக்கழகங்களிலேயே முதன் முறையாகத் தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத் துறையில் முதுகலை நாடகம் மற்றும் அரங்கக் கலைப்படிப்பு தமிழ் வழியில் தொடங்கப்பட்டுள்ளது. இதுபோன்று, தமிழ் மக்களின் நலன் சார்ந்த பணிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடர்ந்து மேற்கொள்ளும் என்றார் துணைவேந்தர்.

## தமிழ் வளர்ச்சித் துறை 2019-20 ஆம் ஆண்டு அறிவிப்புகள்... துணைவேந்தரின் செய்திக்குறிப்பு

தமிழ் வளர்ச்சித் துறை 2019-20ஆம் ஆண்டு அறிவிப்புகளின்படி, தமிழ் பல்கலைக்கழகத்தின் கல்வி வளர்ச்சிக்கும், கட்டமைப்புக்கும் உதவிடும் வகையில், 15 பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள் பயன்பெறும் வகையில் இப்பல்கலைக் கழகத்துக்கு வருகை தரும் பேராசிரியர்களாக அழைப்பதற்கு, ஆண்டொன்றுக்கு ரூ.54 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தில் பயிலும், முதுகலைத் தமிழ் மற்றும் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலைத் தமிழ் மாணவர்களை ஊக்கப்படுத்தி உதவிடும் வகையில், 45 மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.2000 கல்வி

உதவித்தொகை வழங்க, ஆண்டோன்றுக்கு ரூ.39.60 லட்சமும், பிஜி மற்றும் பிரிட்டிஷ் கயனா நாட்டில் உள்ள தமிழ் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இலக்கிய, இலக்கணம், பேச்சு மற்றும் எழுத்துப் பயிற்சி அளிக்க நல்கையாக, ரூ.30 லட்சமும், தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்துக்கு, வெளி மின்னமைப்புப் பணிகளுக்கு நல்கையாக ரூ.30 லட்சமும் என, மொத்தம் ஒரு கோடியே 53 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காகத் தமிழக முதல்வர், துணை முதல்வர், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோருக்குத் தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறையில், சிங்கப்பூர் முஸ்தபா அறக்கட்டளை சார்பாக 2007-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழவேள் கோ.சாரங்கப்பாணி ஆய்வு இருக்கையில் வாயிலாக, ஆண்டுதோறும் இலங்கை, சிங்கப்பூர், மலேசியாவைச் சேர்ந்த சிறந்த தமிழ்ப் படைப்புகளுக்காக ‘கரிகாலன்’ விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2017-ஆம் ஆண்டுக்கான கரிகாலன் விருதுக்கான போட்டியில் இலங்கை எழுத்தாளர் ஜுனைதா செரிப்பின் புதினமான ‘சூனியத்தை நோக்கி’, சிங்கப்பூரைச் சேர்ந்த செ.பாலசுப்பிரமணியத்தின் ‘விழித்திருக்கும் நினைவலைகள்’, மலேசியாவைச் சேர்ந்த டாக்டர் ஜி. ஜான்சனின் ‘தொடுவானம்’ என்னும் தன்வரலாற்று நூல் ஆகியவை கரிகாலன் விருதுக்குரிய படைப்புகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.


02-04-2019

## செஞ்சுருள் சங்க கருத்தரங்கு

செஞ்சுருள் சங்க விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. முனைவர் கோ.ப. நல்லசிவம் ஒருங்கிணைத்த இக்கருத்தரங்கில், துணைவேந்தர் தலைமையுரையாற்றினார். மருத்துவர் பசுபதீஸ்வரன் (மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு மற்றும் செஞ்சுருள் சங்கம்), வேதிபிரபு (ஆலோசகர், மாவட்ட எய்ட்ஸ் தடுப்புச்சங்கம்),ஜெனிஃபர்(மாவட்டக் கண்காணிப் பாளர், எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம்), ஆகியோர், கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



## தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் பதிப்புத்துறை நூல்கள் 50 விழுக்காடு கழிவுவிலையில் விற்பனை

தமிழ்ப்பல்கலைக்கழக பதிப்புத்துறை சார்பாக, ஆண்டுதோறும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் மற்றும் பல்கலைக்கழகத் தொடக்கநாளையொட்டி, செப்டம்பர் 15 முதல் ஒருமாத காலத்துக்கு நூல்கள் 50 விழுக்காடு கழிவுவிலையில் விற்பனை செய்யப்பட உள்ளன. இதன் தொடக்க விழா தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகத்தில் நடைபெற்றது. சிறப்பு விற்பனையைத் தொடங்கிவைத்துப் பேசிய

துணைவேந்தர், இதுவரை பதிப்புத்துறை மூலம் 509 தலைப்புகளில் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 250 தலைப்பிலான நூல்கள் விற்பனைக்காக இருப்பில் உள்ளன. இந்த வெளியீடுகளை மறுபதிப்பு செய்ய எட்டுக்கோடி ரூபாயைத் தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இரண்டு கோடி ரூபாய் செலவில், 216 தலைப்பிலான நூல்களை மறுபதிப்பு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் மின்னணு வடிவிலும் நூல்களை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக சிறப்பு நிலை அறுவை சிகிச்சைப் பேராசிரியர் சு. நரேந்திரன் சிறப்புரையாற்றினார். பதிப்புத்துறை இயக்குநர் (பொறுப்பு ) பேராசிரியர் சி. தியாகராசன் வரவேற்றார். பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) பேராசிரியர் கு.சின்னப்பன் மற்றும் பல்கலைக்கழகக் கல்விநிலை, அலுவல்நிலைப் பணியாளர்கள், நகரவாசிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு நல்கை நிறுவனங்களிடமிருந்து கிடைத்துள்ள ஆய்வுத்திட்டங்கள்: 2018 - 2019

| வ.எண் | ஒருங்கிணைப்பாளர் பெயர் | ஆய்வுத் தலைப்பு | நிறுவனத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட நல்கை ரூ | வரப்பெற்ற நல்கை | திட்ட காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | முனைவர் கோ.சே.கோவைமணி, ஓலைச்சுவடித்துறை | சுவடிகள் பாதுகாப்பு மையம் ஆய்வகம் | புதுதில்லி தேசிய சுவடிகள் இயக்ககம் (NMM) | 21,00,000/- | ஆண்டு தோறும் ரூ.7.00 | 2017-2020 |
| 2 | முனைவர் [illegible] இணைப் பேராசிரியர் மற்றும் முனைவர் [illegible] உதவிப்பேராசிரியர் சித்தமருத்துவத்துறை | FORMULATION AND EVALUATION OF ANTI FUNGAL NOVEL MICROEMULSION USING WRIGHTIA TINCTORIA SIDDHA HERB | பல்கலைக்கழக மானியக்குழு (UGC) | 3,00,000/- | 3,00,000/- | 2019-2020 |
| 3 | முனைவர் அ.பா.கார்த்திக் ஆனந்தபாபு உதவிப்பேராசிரியர் கணிப்பொறி அறிவியல்துறை | DESIGN AND DEVELOPMENT OF UBIQUITOUS LEARNING ENVIRONMENT WITH CONTEXT AWARE SERVICES | பல்கலைக்கழக மானியக்குழு (UGC) | 2,00,000/- | 2,00,000/- | 2019-2020 |
| 4 | முனைவர் செ.நீலகண்டன் பேராசிரியர் தொழில்மற்றும் நில அறிவியல்துறை | SPECTRAL STUDY OF ANALOG REGOLITH AND CHANDRAYAAN-1 HYPERSPECTRAL SATELLITE IMAGE: DISCRIMINATING LITHOLOGY OF MOON HIGHLAND REGION | பல்கலைக்கழக மானியக்குழு (UGC) | 2,00,000/- | 2,00,000/- | 2019-2020 |
| 5 | முனைவர் சா.கவிதா இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி | பல்கலைக்கழகத்தில் [illegible] மொழி பயிற்சி வகுப்பு | இராஷ்ட்ரிய [illegible] (RMVS) அமைப்பு | 3,80,000/- | 3,80,000/- 3,53,441/- | 11.12.2018 முதல் 11.01.2019 |
| 6 | முனைவர் வீ.செல்வகுமார் கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை | Historical and Archaeological Heritage Management and Cultural Tourism in India and Japan : Issues and Prospects for Development | ICHR-JSPS | 3,00,000/- | 2,80,000/- | 12, 13, 14 பிப்ரவரி 2019 |
| 7 | தத்துவமையப் பேராசிரியர் முனைவர் [illegible] | இந்திய தத்துவ ஞானிகள் தினம் | ICPR | 20,000/- | ரூ.20,000/- | |
| 8 | தொழில் மற்றும் நில அறிவியல் துறை பேராசிரியர் முனைவர் செ.நீலகண்டன் | "Digital-Poompuhar" Network Project on Digital Reconstruction of underwater Heritage site Poompuhar | புதுடெல்லியில் உள்ள இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கழகம் | ரூ.39.526 இலட்சம் | தொடரா செலவினங்கள் தலைப்பில் ரூ.1.00 இலட்சமும் தொடர் செலவினங்கள் தலைப்பில் ரூ.10.00 இலட்சம் | 3 ஆண்டுகள் |

## 2018-2019 ஆம் ஆண்டுக்குத் தமிழக அரசு அனுமதித்துள்ள திட்டங்கள்

| | தமிழக அரசு திட்டங்கள் | அரசாணை எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பழமையான கட்டடங்களை சிறப்பு சீர்காப்பு செய்வதற்கு | அரசாணை நிலை எண். 5, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 2-2)த் துறை, நாள்.10.01.2019 | 3,15,47,000 |
| 2. | தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வளாகச் சுற்றுச்சுவர் கட்டுதல் பணி | அரசாணை நிலை எண். 14, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 2-2)த் துறை, நாள்.31.01.2019 | 1,59,00,000 |
| 3. | தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கரிகாற்சோழன் கலையரங்கம் மேம்படுத்துதல் பணி | அரசாணை நிலை எண்.16 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை நாள் 31.1.2019 | 2,44,82,000 |
| 4. | சிற்பக்கலைப் பயிற்சிக் கூடம் அமைக்க | அரசாணை நிலை எண்.182தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை நாள்4.12.2018 | 50,00,000 |
| 5. | தமிழ்ப் பல்கலைக்கழக நூலகப் பனுவல் அரங்கத்தை மேம்படுத்துதல் | அரசாணை நிலை எண். 164 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 2-2)த் துறை, நாள்.30.10.2018 | 40,00,000 |
| 6. | தமிழ்ப் பல்கலைக்கழக நூல்களை மறுபதிப்பு செய்வதற்கு ரூ.2.00 கோடி வீதம் நான்கு ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்தல் | அரசாணை நிலை எண். 248, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 2-2)த் துறை, நாள்.09.11.2018 | 2,00,00,000 |
| 7. | தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தை மின்னணு நூலகமாக மாற்றுதல் (Digital Library) | அரசாணை நிலை எண். 161, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 2-2)த் துறை, நாள்.25.10.2018 | 50,00,000 |
| 8. | தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள அரிய நூல்களை மின்னாக்கம் செய்வதற்கு (Digitalization) | அரசாணை நிலை எண். 117, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 2-2)த் துறை, நாள்.14.08.2018 | 10,00,000 |
| 9. | தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் யோகா மையம் அமைப்பதற்கு | அரசாணை நிலை எண். 132 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 2-2)த் துறை, நாள்.10.09.2018 | 10,00,000 |
| 10. | மியான்மர், தென்னாப்பிரிக்கா நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்களுக்கு பண்பாட்டு பயிற்சி திட்டம் செயல்படுத்துவதற்கு | அரசாணை நிலை எண். 160, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 2-2)த் துறை, நாள்.25.10.2018 | 22,00,000 |
| 11. | தமிழ்ப் பண்பாட்டு மையம் | அரசாணை நிலை எண். 203 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை நாள் 24.9.2018 | 1,00,00,000 |
| 12. | தமிழ் வளர் மையம் | அரசாணை நிலை எண். 31 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை நாள் 28.2.2019 | 2,00,00,000 |
| 13. | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம் சொற்குவைத் திட்டம் | அரசாணை எண். 23 தமிழ் வளர்ச்சி 31(ம) செய்தித்துறை நாள் 11.2.2019 | 1,00,00,000 |

# தமிழ்ப் பல்கலைக்கழக நிறுவன நாள்

பல்கலைக்கழக நிறுவன நாள் 16-09-2019 அன்று கரிகாற்சோழன் கலையரங்கில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைப்பது தொடர்பாக 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதையே தமிழ்ப் பல்கலைக்கழக நிறுவன நாளாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நிறுவன நாள் நிகழாண்டு முதல் சிறப்பாகக் கொண்டாடப்படும் என்றார், தலைமையுரையாற்றிய துணைவேந்தர்.



வாழும் மொழிகளுக்கான முதல் பல்கலைக்கழகமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. இதைப் பார்த்துதான் 1985 -ஆம் ஆண்டில் தெலுங்கு, 1991-ஆம் ஆண்டில் கன்னடம், 2012 -ஆம் ஆண்டில் மலையாளம் ஆகிய மொழிகளுக்குப் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டன. மேலும், 2018 - ஆம் ஆண்டில் ஒடிசா மொழிக்குப் பல்கலைக்கழகம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது.

பிற மொழிப் பல்கலைக்கழகங்களுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. எனவே, தமிழ் உள்ளளவும் இந்தப் பல்கலைக்கழகத்தை அமைத்த எம்.ஜி.ஆரை நாம் நினைவுகூர வேண்டும். இந்தப் பல்கலைக்கழகத்தை முதல் துணைவேந்தர் வ.அய்.சுப்பிரமணியம் சிறப்பாக இயக்கினார். எனவே, இப்பல்கலைக்கழகத்தில் வ.அய்.சுப்பிரமணியத்தின் சிலை நிறுவப்படும் என்றார் துணைவேந்தர்.

முன்னாள் துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி சிறப்புரையாற்றினார். சென்னையிலிருந்து பயணித்து மிகுந்த திரவியம் செலவு செய்து, திருவாரூர் வடுகநாத தேசிகரிடம் தொல்காப்பியம் பயின்ற பழைய தலைமுறை ஆளுமைகள் எழுதியவற்றை நாம் கவனத்தில் கொண்டு நமது கல்விப் புலமையை நாளும் வளர்த்துக் கொள்ள வேண்டும். நமது பல்கலைக்கழகப் பதிப்புகள் பல புகழ் பெற்றவை. மீள் பதிப்புக்கு உரியவை. ஆய்வு உலகிலும் பதிப்புலகிலும் சிறந்த நிலையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் வளர வேண்டும். தொடர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டும். என்றார். எழுத்தாளரும், தமிழ்ப் பல்கலைக்கழக முதல் துணைவேந்தரின் தனிச் செயலருமான தஞ்சாவூர்க் கவிராயர் வாழ்த்துரையாற்றினார். மொழிப்புல முதன்மையர் இரா.காமராசு அறிமுகவுரையாற்றினார். பேராசிரியர் தெ.வெற்றிச் செல்வன் தொகுப்புரை யாற்றினார். ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் பா.ஜெயக்குமார் வரவேற்றார். பதிவாளர் (பொ) பேராசிரியர் கு.சின்னப்பன் நன்றி கூறினார்.

# தமிழி வாழ்த்துகிறது...

தமிழ்ப் பல்கலைக்கழக அலுவல்வழி ஆட்சிக்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ள, **அரசுச் செயலாளர் திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப,** அவர்களையும், மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்களாகப் பொறுப்பேற்றுள்ள **முனைவர் சி. அமுதா, முனைவர் பா. ஷீலா, முனைவர் க. சங்கர்,** ஆட்சிக்குழு உறுப்பினராகவும், தொலைநிலைக் கல்வி இயக்குநராகவும் பொறுப்பேற்றுள்ள **முனைவர் பா.ஜெயக்குமார்,** பேரவை உறுப்பினர்கள் **முனைவர் கே. ஜெயபாலன், முனைவர் எஸ். ரவிச்சந்திரன், முனைவர் கே. மனோகரன், முனைவர் ஜே. கிருஷ்ணன், முனைவர் வி. தமிழரசி, முனைவர் ச. இராசாமணி** ஆகிய பெருமக்களையும், வளர்தமிழ்ப்புல முதன்மையர் மற்றும் பதிவாளராகப் பொறுப்பேற்றுள்ள **முனைவர் கு. சின்னப்பன்,** நிதிஅலுவலராகப் பொறுப்பேற்றுள்ள **முனைவர் இரா. உமாமகேஸ்வரி,** பதிப்புத்துறை இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ள **முனைவர் சி. தியாகராசன்,** தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலராகப் பொறுப் பேற்றுள்ள **முனைவர் த. கண்ணன்,** மொழிப்புல முதன்மையராகப் பொறுப்பேற்றுள்ள **முனைவர் இரா.காமராசு,** கூடுதல் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலராகப் பொறுப்பேற்றுள்ள **முனைவர் ஆதித்தன்,** தமிழ்ப்பண்பாட்டு மைய இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ள **முனைவர் பெ.கோவிந்தசாமி,** தமிழ்வளர்மைய இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ள **முனைவர் இரா.குறிஞ்சிவேந்தன்,** ஆகியோரையும் வாழ்த்துகிறோம்.

களஞ்சியம்

(பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டபோது அச்சடிக்கப்பட்ட அழைப்பிதழ்)

நன்றி: தகவல் உதவி, கவிஞர் அமரன்.



தமிழ்ப் பல்கலைக் கழகத்
தொடக்க விழா
தஞ்சாவூர்
15-9-1981 — 17-9-1981
அழைப்பிதழ்



தமிழ்ப் பல்கலைக் கழகத்
தொடக்க விழா
பேரன்புடையீர்,
வணக்கம்.
திரு. எம். ஜி. ஆர். அவர்கள்





தமிழ்ப் பல்கலைக் கழகத் தொடக்க விழா
15-9-1981